ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/10 - 2023 ඔක්තෝබර් මස 03 වැනි අඟහරුවාදා - 2023.10.03

*2352/10 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள்,
"சுஹுருபாய", சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 15.

**அட்டவணை**

வெளிமட நகர அதிகார பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

*நிரல் I*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்திய இலக்கம் 1210/ 16 மற்றும் 2001.11.16 ஆந் திகதிய ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தின் வெளிமட நகர அதிகாரப் பிரதேசத்திற்குச் சொந்தமாகும் இலக்கம் 52-D வெளிமட கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 52-B லந்தேகம கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 59D-திவிதொட்டவெல கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 48-அம்பகஹகும்புர கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 59A-தம்பவின்ன மகிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, இலக்கம் 48A-திவுரும்கம கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, இதைவிட 50H-திமுத்துகம கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 50-D பாலுகம எல்ல கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 50I-புரன்வெல கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 50-பாலுகம நகர கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 48A-திவுரும்கம கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி, இலக்கம் 59A-தம்பவின்ன கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய இங்கு நிரல் II இல் விபரிக்கப்படும் அதன் எல்லைகளும் குறியீடுகளினையும் கொண்டமைந்து சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினை உள்ளடங்கியதாகும்.*

*நிரல் II*

**வடக்கு:**

வெளிமட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தாகும் இலக்கம் 50-பாலுகம நகர கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லை (A5) பேராதெனிய-செங்கலடி பிரதான வீதியினைக் குறுக்கு வெட்டும் புள்ளியில் ஆரம்பித்து அந்த கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக கிழக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 50I-புரங்வெல கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து இலக்கம் 50I-புரங்வெல, கிராம அலுவலர் பிரிவின் வடக்கு, வடகிழக்கு திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 48B-கிராம்பே கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் தெற்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது 48A-திவுரும்கம கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளி வரை அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் வடகிழக்கு, வடமேற்கு, கிழக்கு, தென்கிழக்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது இலக்கம் 48-அம்பகஹகும்புர கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு, தெற்கு, கிழக்கு, வடமேற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு, வடகிழக்கு, தெற்கு, கிழக்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது உமாஓய மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளி வரை, அந்த இடத்தில் இருந்து வெளிமட நகர கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையினைக் குறுக்கு வெட்டும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து வெளிமட நகர கிராம அலுவலர் பிரிவின் வடகிழக்கு, கிழக்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது உடுபுசெல்லாவ-வெளிமட (B-471) வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு,த் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது உமாஓயவின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் வரை, அந்த இடத்தில் இருந்து அந்த கோடானது உமா ஓயவின் மத்திய புள்ளியினை ஒட்டி நீட்டப்பட்டு திவிதொட்டவெல கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை.

**கிழக்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 50D-திவிதொட்டவெல கிராம அலுவலர் பிரிவின் வடமேற்கு எல்லையின் ஊடாக தெற்குத் திசையினை நோக்கி வரையப்படும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*நிரல் I* *நிரல் II*

கோடானது உக்வத்தை கந்தூர மத்திய புள்ளியின் ஊடாக இலக்கம் 59A-தம்பவின்ன கிராம அலுவலர் பிரிவின் B44 வீதியின் மத்திய எல்லையினை குறுக்கு வெட்டும் புள்ளி வரை அந்த இடத்தில் இருந்து அந்த கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது B-508 வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை.

**தெற்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 59A-தம்பவின்ன கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக வெளிமட பொரலந்த (B-48) வீதி மத்திய கோட்டினை குறுக்கு வெட்டி நீட்டப்பட்ட கோடானது மேற்குத் திசையினை நோக்கி கல்பொத்த கந்துரே மத்திய புள்ளியினைச் சந்திக்கும் வரை பயணித்து அதனைத் தொடர்ந்து அந்தக் கோட்டினை வடக்கு, வடமேற்குத் திசையினை நோக்கி குடாஓய மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளி வரை, அதனைத் தொடர்ந்து குடா ஓயவின் மத்திய புள்ளியின் ஊடாக தென்மேற்குத் திசையினை நோக்கி வரையப்பட்ட கோடானது 50I-புரன்வெல கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைச் சந்திக்கும் வரை பயணித்து அதன் பின்னர் அந்தக் கிராம அலுவலர் பிரிவின் தெற்குத் திசையின் ஊடாக மேற்கு, வடமேற்கு, தென்மேற்குத் திசையினை நோக்கி நீட்டப்படும் கோடானது B353-கெப்பெட்டிபொல-பொரலந்த வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் வரை.

**மேற்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து ஆரம்பமாகும் இலக்கம் 50-பாலுகம நகர கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக வரையப்பட்ட கோடானது தென்மேற்கு, வடமேற்கு, மேற்கு மற்றும் வடக்குத் திசையினை நோக்கிப் பயணித்து (A5) பேராதெனிய-செங்கலடி வீதியின் ஆரம்பப் புள்ளிவரை உள்ளடங்கும் முழு நிலப் பிரதேசமாகும். வீதியின் ஆரம்பப் புள்ளிவரை உள்ளடங்கும் முழு நிலப் பிரதேசமாகும்.

EOG 10-0011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.